<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S.No. 8/2023 Date : 29.06.2026

பெயர் : டேவிட் இளவரசன் வாசா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

1) நான் தாக்கல் செய்த வழக்குரையில் பத்தி 7–ல் மூன்றாவது வாதி செயலாளர் என்றும் நான்காவது வாதி பொருளாளர் என்றும் சொல்லியுள்ள நிலை அது தொடர்பாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளீனா என்று எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்த இவ்வழக்கில் இணைத்துள்ள பத்து ஆவணங்களில் எந்த ஆவணம் ஆனது மூன்றாவது வாதி செயலாளர் மற்றும் நான்காவது வாதி பொருளாளர் என குறிப்பிடுவதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் மூன்றாவது வாதி செயலாளர் மற்றும் நான்காவது வாதி பொருளாளர் என எடுத்துரைப்பதற்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் ரொம்ப நாட்களுக்கு முன்பாக வழக்கு தாக்கல் செய்ததால் அது பற்றி தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லையா என்றால் சரியல்ல ஞாபகம் உள்ளது.

2) என்ன பரிகாரம் கூறி வழக்கு தாக்கல் செய்து உள்ளீர் என்றால் 1984 ஆம் ஆண்டு முதல் எனது மாமனாருடன் நான் சபை நடத்தி வந்தேன் அதன் பின்னிட்டு சபை நடத்தி வந்ததை தடுத்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என சாட்சி அளித்துள்ள நிலையில்அந்த வழக்கில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என ஞாபகம் இல்லை என சொல்வது இவ்வழக்கில் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் இல்லை.

3) இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மற்றொரு வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் விபரங்கள் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தற்போது தெரியாது ரொம்ப நாட்கள் ஆகிவிட்டதால் தெரியவில்லை. நான்

தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் பாஸ்டர் சாலமன் பிரபாகரன் என்பவர் கோஸ்பல் லைட் ஹவுஸ் சர்ச் நடத்தி வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அது தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்குறிப்பிட்ட வகையில் நான் எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

4) போர்ட் ஆஃப் பிரைஸ் மினிஸ்ட்ரிஸ் என்ற பெயரில் திருநெல்வேலியில் உள்ள திருச்சபையில் நான் பொருளாளராக இருந்து வருகிறேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் போர்ட் ஆஃப் பிரைஸ் மினிஸ்ட்ரிஸ் திருச்சபையில் நான் ட்ரஷ்டியாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த சபை ஆரம்பிக்கும் போது நான் அந்த சபை ஆரம்பிப்பதற்கு உதவியாக இருந்ததால் அந்த சபையின் டிரஸ்டியாக சேர்க்கப்பட்டுள்ளேன் நான் அந்த சபையின் பொருளாளர் கிடையாது.(போர்ட் ஆப் பிரைஸ் மினிஸ்டிரிஸ் நிறுவனத்தின் பதிவு தகவர்லகள் இணையவழி தரவிறக்கம்) நான் தற்போது அந்த திருச்சபையின் டிரஸ்டியாக இல்லை. நான் மேற்படி திருச்சபையில் டிரஸ்டியாக பணியில் இல்லை என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளீரா என்றால் தயாராக உள்ளேன். எந்த ஆண்டு வரையில் டிரஸ்ட் யாக இருந்து வந்தீர்கள் என்றால் 2018 ஆம் ஆண்டு வரை டிரஸ்டியாக இருந்து வந்தேன்.

5) டி என் குட் நியூஸ் ஃபவுண்டேஷன் என்ற நிறுவனத்தை நான் நிறுவி நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. அந்த நிறுவனத்தின் பதிவு எண் 87/2020 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த நிறுவனத்தை நான் ஆரம்பித்தேன் ஆனால் அந்த நிறுவனம் ஒரு மாதம் மட்டும்தான் நடந்தது அதன் பின்னிட்டு மேற்கொண்டு செயல்படவில்லை. நான் பல்வேறு திருச்சபைகளில் நிறுவனராகவும் பொறுப்பாளராகவும் உறுப்பினராகவும் இருந்து வருவதால் மெட்ராஸ் பெண்டிகோஸ்டல் அசெம்பிளி சபையில் உறுப்பினராக கூட இருக்க முடியாது என்றால் சரியல்ல.

6) நான் எந்த திருச்சபையிலும் நிறுவனராக உறுப்பினராகவோ கிடையாது. நான் இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனது தரப்பில் என்னால் எவ்வித இதர சாட்சிகளையும் சாட்சியாக இவ்வழக்கில் விசாரணை செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிவுற்றது**</u>

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif–cum Judicial Magistrate,

Pallavaram